## தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (10.08.2016 முதல் 14.08.2016)

**அறிக்கைஎண் :064/2016** **தேதி:09.08.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை:திருப்பூர் (10.08.2016 முதல் 14.08.2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 77 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10.08.16 | 0 | 33 | 23 | 5 | 77 | 56 | 19 | தெற்கு |
| 11.08.16 | 0 | 33 | 23 | 5 | 77 | 56 | 19 | தெற்கு |
| 12.08.16 | 0 | 33 | 23 | 5 | 77 | 56 | 19 | தெற்கு |
| 13.08.16 | 0 | 33 | 23 | 5 | 77 | 56 | 19 | தெற்கு |
| 14.08.16 | 0 | 33 | 23 | 5 | 77 | 56 | 19 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் நாட்களில் தகுந்த வானிலை எதிர்பார்க்கப்படுவதால், ஆகஸ்ட் 15-ம் தேதி இறவை குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கு தேவையானஇடுபொருட்களை தயார் செய்யவும்.

- ✓ பகல் நேர வெப்பநிலை 32 டி.செக்கும் அதிகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளதால், கறவை மாடுகள், உழவு மாடுகள் மற்றும் கோழிகளுக்கு போதுமான தண்ணீர் கொடுக்கவும்

- ✓ வரும் நாட்களில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்டுவதால், மல்லிகை பூ மொட்டுகளில் மொட்டு புழு தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து, ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி மோனோக்ரோடோபாஸ் மருந்தை கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் நாட்களில் தகுந்த வானிலை எதிர்பார்க்கப்படுவதால், ஆகஸ்ட் 15-ம் தேதி இறவை குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கு தேவையானஇடுபொருட்களை தயார் செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**